756

Regd. No. M. 878.

தொகுதி 10. பகுதி ௫.

# பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919வரு டிசம்பர் மீ—சித்தார்த்தி வரு மார்கழி மீ

MAR 1920

## விஷயங்கள்.


| | |
|---|---|
| தற்காலநிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர் பி. ஏ. | 217 |
| தேசியகல்வி ஷை | 225 |
| தத்துவஞான அனுஷ்டானம்—வி. ஜினராஜ தாஸா | 23[illegible] |
| மனதும் அதன் தாமங்களும்—கிருஷ்ணசாமி பி. ஏ. | 238 |
| சிறுவர்பக்கம்—எஸ். ஆர். அனந்தநாராயண ஐயா | 246 |


அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reseved.

**யோக உபந்யாஸங்கள்—அனிபெஸண்டு**

ப. நாராயணையா மொழிபெயர்ப்பு 0—12—0

**மரணபயம் வேண்டாம்**—ப. நாராயணையர் 0—2—0

டஜன் பிரதிகளுக்கு 1—4—0

**தியானக்கிரம விஷயம்.**

கே. எஸ். இராமசந்திரையர் 0—4—0

[illegible]திரோதயம் 4-வது தொகுதி.

[illegible] பைண்டுபண்ணினது. 2—8—0

[illegible]

பூர்ண சந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

சிவமணமும் கானரஸமும் பொருந்திய நாடகம் எது?

மாணிக்க வாசகர்—துரைசாமி ஐயங்கார். பி. ஏ. 0—8—0

பக்தி ரஸமும் சோக ரசமும் மலிந்த நாடகமேது?

மீராபாய்—புரொபஸர் ஆர். ஸ்ரீனிவாசன் எம். ஏ. 1—4—0

குடும்பசம்பவங்களை இனிமையாய் எடுத்துக் கூறும் சிறந்த சிறு நாடகங்கள் எவை? மங்களம். 0—4—0

மீனாக்ஷிசுந்தரம். 0—6—0

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

---

படங்கள். விலைசரசம். படங்கள்.

| | |
|---|---|
| பிளாவட்ஸ்கி அம்மையார் | 0—1—0 |
| அன்னி பெஸண்டு | 0—1—0 |
| கர்னல் ஆல்காட் | 0—1—0 |
| தாமோதர மாவலங்கர் | 0—1—0 |
| ப. நாராயணையர் | 0—1—0 |

தபாற்கூலியும் பாக்கிங்கூலியும் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

---

புதிய தினுசுகள்! சகாய விலை!!

சேலம், துயிலி, இன்னும் அநேகவித பல கரைகளில் 5-அல்லது 6-முழம் அங்கவஸ்திரங்கள்.

விலை ரூபா. 10, 12, 15, 20 வரையில்.

☞ நிறம் வெள்ளை, லயிட்ரோஸ், நீலம், இன்னும் அநேகவித லயிட் கரைகளிலும் அகப்படும்.

ஒரு முறை எங்களுக்கு ஆர்டர் செய்தால் உண்மை தெரியவரும்.

கிரய ஜாப்தா இனாம்.

சர்மா அண்டு கோ., ஸ்ரீ காசி.

SARMA & COMPANY,

SILK MERCHANTS & MANUFACTURERS, *Benares City.*

உ

**உயர்ந்த தினுசுகள்!** **குறைந்த விலைகள்!!**

## தூ. ரெங்கசாமி அய்யர் அண் சன்ஸ்

தங்கமெடல்கள் சன்மானம் பெற்ற

# ஜவுளி வியாபாரிகள்.

## மதுரை

ரூ. 1 முதல் 1000 ரூ வரையுள்ள ஜவுளி

தினுசுகள் விற்பனைக்குத் தயார்.

5 MAR 1920
MADRAS

நம்முடைய ஜவுளிக்கடையில் காசி பனாரஸ், அம்மாப்பேட்டை, உள்ளூர், பெங்களூர், ஆரணி, காஞ்சிபுரம், கல்கத்தா, பம்பாய், கும்பகோணம், கஞ்சாவூர், திருச்சினப்பள்ளி இன்னும் அநேக ஊர்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும் ஜரிகையும் கலந்த உயர்ந்த சேலைகள் ரூ. 50 முதல் ரூ. 1000 வரையிலும் முகூர்த்தப்பட்டு சோமன ஜோடிகள் ரூ 10 முதல் ரூ. 150 வரையிலும் ரவிக்கை தினுசுகள் ரூ. 2 முதல் ரூ. 100 வரையிலும் இன்னும் அநேக புது தினுசுகளும் ஏராளமாய்த் தயார்செய்து வைத்திருக்கிறோம். ஆகையால் வேண்டியவர்கள் நம்முடைய கடையில் வந்து பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர குறைந்த விலையும் கெட்டிச்சாயமுமுள்ள நாட்டு சேலைகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய அநேக தினுசுகள் ஏராளமாயிருக்கின்றன.

**ஹெட் ஆபீஸ்,** **பிராஞ்சு,**
**கீழவெளி வீதி.** **மேலக்கோபுர வாசல்,**

மதுரை.

# வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்ருகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

## பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

## ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

## காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

## அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது.
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக் இனமாக அனுப்பப்படும்.
தபால சார்ஜும், பாக்கிங் கூலியும் பிரத்தியேகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

## இந்தியாவில் மிகப்பெரிதும்

## பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹூ ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ஹர

# ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

**சஞ்சீவி**

**பாலமித்ர**

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதடபடும்

### இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள உத்தியோகம் செய்கிறார்கள்.

### மூதன்மையான

மருந்து சென்ற 35 ஹூகாலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள

32 மாத்திரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜீ**

**ஆதங்க நிக்கிரக**

ஔஷதாலயம்

45, மேலகோபுர வீதி

மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளு

க்கு சிறந்தமருந்து

**காசாந்தக**

மாத்திரைகள் டப்

பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்க

ள் கேட்லாக்கை

பார்த்திராவிடில்

உடனே உங்கள்

விலாசத்தை எழு

துங்கள் எவ்வித

செலவில்லாம

லும் இனமாய்

அனுப்புகிறோம்

ஸ்ரீ ராமஜெயம்.

# புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

# மு. ரா. பெருமாளய்யர்

## மேலக்கோபுவாசல் தெரு, மதுரை.

---

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ள-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக்கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுகளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக்கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 10. | சித்தார்த்தி௵ மார்கழிமீ 1919௵ டிசம்பர்மீ | பகுதி 8 |


## தற்கால நிலைமை.

இந்தியாவில் கல்வி அபிவிருத்தியடைய வேண்டுமானல் தனிகர்களாயும் தேசபக்தர்களாயும் இருக்கும் உத்தமர்கள் மனமுவந்து தங்களால் ஆனமட்டில் பொருளுதவி செய்தால் தான் சாத்தியமாகும். கல்கத்தா சர்வ கலா சாலையின் மாண்புறுமக்களில் சிகாமணியாய் விளங்கும் டாக்டர் ஸர் ராஸவிஹாரி கோஸ் அவர்கள் தமது தாய் போன்று விளங்கும் கல்கத்தா சர்வகலாசாலைக்கு 11லக்ஷம் ரூபாய் கொடுத்து அதைக் கொண்டு கைத்தொழில யந்திரத்தொழில் முதலிய தொழிற் தேர்ச்சியை முன்னுக்குக் கொண்டுவர உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறாம். கல்கத்தா ஹைகோர்ட்டில் பலவருஷங்களாக வக்கீல் உத்தியோகத்தில் உன்னதமான பதவியை வகித்து ஏராளமான பொருளைச் சம்பாதித்தவர், மன்னர்களாலும் புகழக்கூடிய இப்பெரும் கொடையை தேசக்ஷேமத்தின் பொருட்டு விநியோகம் செய்தது அவருடைய பெருமையைப் பல்லாயிர மடங்கு தூக்கிக் காட்டுகின்றது.

அவர் வயது மிகுந்தவராயினும் அவருடைய புகழுடம்பானது இனி வருங்காலமெல்லாம் மங்காமல் குன்றாமல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

***

ஆனால் கல்கத்தாவில் தான் இம்மாதிரி கொடையாளிகள் கிளம்பி மேற்கூறியபடி தொழிலபிவிருத்திக்காகப் பொருளுதவி செய்திருக்கிறார்களேயொழிய, இந்தியாவின் மற்ற மகாணங்களில் அனைவரைக்காணோம். இக்காலத்திலோ இத்தகைய கல்வியைக் கற்பிக்கவேண்டுமானால் ஏராளமான பொருளில்லாமல் சாத்தியமேயில்லை. ஆகையால் மற்ற மகாணத்துத் தேசபக்தர்களே! செல்வந்தர்களே! நீங்களும் உங்களுடைய தேசபக்தியை நிரூபணம் செய்யமாட்டீர்களா? உங்களுடைய பணத்தைப் பொருள்படைத்ததாய்ச் செய்யமாட்டீர்களா? என்றும் அழிவில்லாத புகழுடம்பைப் பெறுவது மற்று எங்ஙனம்?

***

ஆனால் உலகத்தில் நாகரீகத்திற் சிறந்த மேல் நாடுகளிலோ வென்றால், மேற்கூறிய கல்விக்காக இன்னும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறார்கள். இங்கிலாந்தில் மான்செஸ்டர் சர்வகலா சாலையில் தொழிற் கல்விக்காக 150,000 பவுன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதில் பாதி ஏற்கனவே கிடைத்து விட்டதாம். அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு சர்வகலாசாலையிலோ அக்கல்வியபிவிருத்திக்காக மட்டும் யுத்தத்தின் முடிவுக்குப்பின் 4,500,000 பவுன் செலவழித்திருக்கிறார்களாம். இவ்விதமாக தங்கு தடையின்றிப் பொருளைச் செலவழிக்கிறதினால் அல்லவா அந்நாடுகள் செல்வத்தில் மிகுந்து செழித்து விளங்குகின்றன. நமது இந்தியாவும் அங்ஙனம் விளங்கவேண்டுமானால் அந்த மாதிரி முயற்சியில்லாமல் எப்படி சாத்தியமாகும்?

***

சுதேசக் கல்வி அபிவிருத்தி சபையாரும், அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்தியச் சாரணர் சங்கத்தாரும்

கொஞ்சகாலத்திற்கு முன் சென்னை ராஜாங்கத்தாரால் வேற்றுமையாகவே பார்க்கப்பட்டு வந்தது நேயர்கள் அறிந்த விஷயம். ஆனால் அரசாங்கத்தலைவர் மாறி, புதியகவர்னராகிய லார்டு வில்லிங்டன் வந்த பிறகு, அவர்களை அவ்வளவு வேற்றுமையாகவே பார்க்கவில்லையென்று தெரியவந்தது. நமது கவர்னர் வில்லிங்டன் பிரபுவானவர் தாராளமான நோக்கமுடையவர் என்பது அவருடைய பல செய்கைகளால் விளங்குகிறது. சில நாளைக்கு முன்னர், சுதேசக் கல்வியபிவிருத்தி சபையாருடைய பள்ளிக்கூடங்களுக்குச் சென்று அவைகளைப் பார்வையிட்டார். இந்தியச் சாரணர்களுடைய சைனியத்தையும் பார்வையிட்டு அவர்களால் காண்பிக்கப்பட்ட கவாத்துகளையும் வேடிக்கைகளையும் மெச்சினார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியச் சாரணர்களைப்பற்றி சிலாகித்தும் பேசினார். இது நமக்கு மிகவும் சந்தோஷமாகவிருக்கிறது.

***

சென்ற சில வருஷங்களாக ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் அன்னியோன்னிய பாவமானது அதிகரித்து வருகிறது. மேலும், ஹிந்துக்கள் மகம்மதியர்களுக்கு அந்தரங்கமான விஷயங்களை ஆதரித்து அவர்களுடன் ஒற்று உழைத்ததின் பயனாக அமிர்தஸரஸில் நடந்த முஸ்லீம் லீக்கில் மகம்மதியர்கள் ஒரு முக்கியமான தீர்மானம் கொண்டார்கள். அது இந்தியாவுக்கு க்ஷேமகரம், ஹிந்துக்களுக்கு பிரியகரம், மகம்மதியர்களுக்கு சிரேயஸ்கரம் அனைவருக்கும் ஹிதகரமான விஷயம். அது என்னவோவென்றால், மகம்மதியர்களுக்கு மிகவும் சிறந்த பண்டிகையான 'பக்ரீத்' காலத்தில் பசுமாடுகளைக் கொன்று அதன் மாமிசத்தைப் புசிப்பது வெகு காலவழக்கமாயிருந்ததல்லவா? பசுவைத் தெய்வமாகக் கொண்டாடும் ஹிந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் பக்ரீத் காலத்தில் கலகங்கள் உண்டாகி வந்தன. மேற்கூறிய தீர்மானமானது அக்காலத்தில் பசுக்களைக் கொல்லும் வழக்கத்தை நிறுத்தி

விடவேண்டுமென்றும், அதற்குப்பதிலாக வேறு பிராணிகளை வேண்டுமானால் கொல்லவேண்டுமென்றும், இத்தீர்மானத்தை இந்தியா முழுவதும் தவறாது அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்றும், கூறுகிறது. பக்ரீது என்றால் பசுவைக்கொல்லவேண்டுமென்று மகம்மதியமதம் போதிக்கவில்லை. விசேஷமாக ஆடுகளைத் தான் கொல்லவேண்டும். ஆனால் முன்காலத்தில் எது காரணத்திலோ பசுக்களை வதை செய்யும் வழக்கமானது உண்டாய் விட்டது. ஹிந்துக்களோ பசுக்களை கொல்லாமலிருக்கும்படி ரக்ஷிப்பது தம்முடைய விரதமாகக் கொண்டார்கள். ஆகையால் இப்பண்டிகை சமயத்தில் இந்தியாவின் பற்பல பாகங்களிலும் கலகங்கள் நடந்து வந்தன. ஹிந்துக்கள் மனம் நொந்தால் நமக்கென்ன, என்று மகம்மதியரும், அவர்களைச் சமாதானமாகத் தம் வழிக்குக்கொண்டுவர முயலாமல் ஹிந்துக்களும் இருந்த வரையில் இவ்விதமான சண்டைகள் இருப்பது இயல்பு. ஆனால் இவ்வருஷத்திலோ மிகவும் சந்தோஷகரமான இச்சமாதானமானது நிகழ்ந்திருப்பது யாவர் மனத்திலும் பால் வார்த்தது போலாச்சுது. இனி ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சகோதரபாவம் இனியும் மிகுந்து அளவளாவி நிற்பார்கள் என்பதில் இறையேனும் சந்தேகமில்லை.

* * *

இந்தியச் சீர்திருத்தச் சட்டமானது நிரூபணம் செய்யப்பட்டு விட்டது. சட்ட நிபுணர்கள் அச்சட்டத்தால் இந்தியாவுக்கு க்ஷேமமும் மேன்மையும் உண்டாகும் என்கிறார்கள். சுயாட்சி கிடைக்கும் மார்க்கத்தில் வெகுதூரம் வரை கொண்டு விடுகிறதென்று கூறுகிறார்கள். இச்சட்டம் பிறந்தவுடன் நமது சக்கரவர்த்தியாகிய மாட்சிமைதங்கிய ஜார்ஜு மன்னர் இச்சட்டத்தை நன்கு உபயோகப்படுத்தி பொது நலத்தை நாடும்படி ஆசிகூறியும், இந்தியர் மனம் குளிரும் வண்ணம் அரசாங்கத்தாருக்கு எதிரான குற்றங்களைச் செய்த அனைவரையும் விடுதலை செய்திருப்ப

தாக, கருணை நிறைந்த ராஜசாஸனத்தையும் விடுத்தரு ளியிருக்கின்றனர். இது இந்தியாவுக்கு மனமகிழ்ச்சியைத் தரும் மங்கள சாசனமே. நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் நீடூழிவாழ்க! நமது பாரத வருஷம் க்ஷேமத்தைப் பெறுக! இந்த நன்மை கிட்டும் வண்ணம் உழைத்த அனை வரும் நம்மால் ஆதரவுடன் போற்றற்பாலர். முக்கியமாய் இந்தியா மந்திரி ஸ்ரீமான் மாண்டேகுவக்கு யாது கைம் மாறு செய்யவல்லோம்? விடாமுயற்சியுடனும், உண்மை யான லோகோபகாரச் சிந்தையுடனும், தம் தாய்நாடல் லாத அன்னிய நாடாகிய இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவேண்டு மென்று பாடுபட்ட சீலர் இவர். இவருக்கு உதவியாயிருந்து இந்திய புத்திரர்க ளில் ரத்தினம் என்று சொல்லக்கூடிய இந்தியா உபமந்திரி லார்டு ஸிம்ஹாவை யார் தான் மெச்சாதவர். சீர்திருத்த ங்கள் கிடைக்கும்படி இங்கிருந்து இங்கிலாந்து சென்ற அனைவருக்கும் இந்தியாவானது நன்றிபாராட்டுகிறது. நமது தலைவராகிய ஸ்ரீமதி அன்னிபெஸண்டம்மையவர்க ளுக்கோ இந்தியா தேசமானது எவ்வளவு கடைப்பாடுள் ளது என்பதை நம்மவர் முற்றும் அறியவில்லை. அவர்கள் செய்துள்ள பேருபகாரமானது கணக்கிலடங்காது. மற்ற அனைவோர் செய்த கைங்கர்யங்களை ஒரு தட்டிலும், நமது அன்னையவர்கள் செய்த கைங்கர்யங்களை ஒரு தட்டிலும் வைத்துச் சீர் தூக்கின் பிந்தியது தான் இழுக்கும் என்று சொல்வது மிகையாகாது. இந்தியாவின் க்ஷேமத்தையும், அதன் மூலம் உலகத்தின் க்ஷேமத்தையும் விருத்தி செய்து கொண்டு அரோகதிருடகாத்திரராக நமது அன்னையவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

***

1919ஆம் டிசம்பர் மாதம் இறுதியில் 26, 27, 28ஆம் தேதிகளில் மதுரையில் சென்னை ராஜதானி மாணாக்கர்களின் "கன்வென்ஷன்" என்றமகாநாடு கூடிற்று. அக்கன்வென் ஷன் வரவேற்புக் கமிட்டிக்குத் தலைமை வகித்தவர் மதுரை

காலேஜ் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரிகள். கன்வென்ஷனுக்கு அக்கிராசனராக புரொபஸர் ஆகாஷே என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். புரொபஸர் அவர்களோ தேசீய சர்வகலா சாலையைச் சேர்ந்த அடையாற்று வியவசாயக் கல்லூரிக்குத் தலைமையா யமைந்துள்ளார். அவர்கள் மான்செஸ்டர் சர்வகலா சாலையில் எம். ஏ., எம். எஸ். ஸி. பட்டம் பெற்றவர். "சேவக சகோதரர்கள்" என்ற சபையைச் சேர்ந்தவர். சில வருஷங்களுக்கு முன் மாதாஸ்ரீ பெஸண்டம்மையவர்களால் ஸ்தாபிக்கப் பட்ட சேவகசகோதரசபை யங்கத்தினர்கள் தங்கள் சம்பாத்தியத்தை யெல்லாம் அச்சபைக்குக் கொடுத்து விட்டு அச்சபையாரால் மாதம் வேண்டிய செலவுக்குக் கொடுக்கப் படும் திரவியத்தால் காலக்ஷேபம் செய்யவும் மாதிரு பூமிக்கு உழைக்கவும் கட்டுப்பட்டவராவர். அத்தகைய புண்ணிய விரதம் பூண்டசீலர் இவர். கூரிய புத்தியும், சாந்தமான மனதும், இனிய சுபாவமும், புன்முறுவல் பூத்த முகமும், குருதேவனிடத்தில் பொருந்திய திடமான பக்தியும் நிறைந்தவர். இவ்வரிய சீலர் இக்கன்வென்ஷனுக்கு அக்கிராசனராயமைந்தது மாணாக்கர்களின் பாக்கியம் என்று சொல்லத் துணிவோம்.

***

அவர்கள் கூறிய முதற் கூற்றில் தேசீயக் கல்வி யபிவிருத்தி சபையைப்பற்றி ஆங்காங்கு ஏற்பட்டுள்ள தப்பு அபிப்பிராயங்களை விலக்கமுயன்றார். எல்லா மாணாக்கர்களும் அச்சபையாரால் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் சேருவது சாத்தியமில்லை. ஆனால் அப்பள்ளிக்கூடங்களில் எந்த உயர்தரமான திருத்தங்கள் காணப்படுகின்றனவோ, அவைகளை மற்ற பள்ளிக்கூடங்களில் அனுசரிக்கும்படி செய்யவேண்டும் என்றும், அதற்கு இம்மாதிரி கன்வென்ஷன்கள முக்கியமான கால்வாய்களாய் அமையலாம் என்றும் கூறினார். தற்காலத்தின் மேன்மையை அனேகர் நன்கறியாமலிருக்கலாம். ஆனால் உற்று நோக்கின், மகாபாரத யுத்தத்தின் பிற்பட்ட காலத்

த்தையும் பார்க்கிலும் இது மிகுந்த மகிமை வாய்ந்த காலமென்றும், ஆரியவம்சத்தின் முதல் வகுப்பாகிய இந்தியர்களும், 5-வது வகுப்பாகிய ஆங்கிலேயரும் ஒருங்கு சேர்ந்து ஒற்றுமையாய், ஒருவர் பெருமையை மற்றவர் விசேஷமாய் விளங்கும்படி செய்து உலகத்தில் இது வரை நேரிடாதபடி அவ்வளவு விசேஷமான மகாஉன்னத நிலைமையை அடையலாம் என்று கூறினார். மற்ற பள்ளிக்கூடங்களைக் காட்டிலும் தேசிய சர்வகலா சாலைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் விஷயங்கள் மூன்று. அவையாவன; மதம் இந்திய தேசத்தாரின் தர்மம், சரீரப்பயிற்சி என்று கூறி அவைகளைக் கூடியமட்டில் மற்ற பள்ளிக்கூடங்களில் பின்பற்றவேண்டுமென்று கூறினார்.

***

இக்கன்வென்ஷனில் செய்யப்பட்ட தீர்மானங்கள் தற்காலத்திய மாணாக்கர்களின் மனப்போக்கை நன்கு விளக்குகின்றன. அவர்களிடம் வெள்ளிடைமலைபோல காணக்கிடக்கும் தேசபக்திக்கும் பாஷாபக்திக்கும் அறிகுறியாயிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம். 'இண்டர் மீடியேட் பி. ஏ. வகுப்புகளில் தாய்ப்பாஷையை முக்கியமான பாடமாக வைக்கவேண்டும்.' 'ஆங்கிலபாஷைப்பாட புத்தகங்களைக் குறைக்கவேண்டும்.' 'சென்னை சர்வகலா சாலையில் இந்துதேச சரித்திர ஆராய்ச்சி செய்வதற்காக இன்னும் அநேகர்களை நியமித்து, அவர்களை இந்துதேச சரித்திரப் புஸ்தகங்களைப் பிரசுரம் செய்யும்படி செய்து அவைகளை ஆராய்ந்து அங்கீகரித்து வெளியிடவேண்டும்.' 'சென்னை சர்வகலா சாலையார் இந்துதேச சரித்திரத்திற்கு இப்போதைக் காட்டிலும் அதிக கௌரவமான ஸ்தானத்தைக் கொடுக்கவேண்டும்.' 'ஸெகண்டெரி பள்ளிக்கூடங்களில் தாய்ப்பாஷை மூலமாகவே பாடங்களை கற்பிக்க வேண்டும்.' 'எல்லாருக்கும் முதல்தர கல்வி கிடைக்கும் வண்ணம் அதை இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்கவேண்டும்.'

‘பள்ளிக்கூடங்களில் ஹிந்தி பாஷையை எல்லா மாணாக்கர்களும் கற்கும்படிக்கும் இந்தியா முழுவதும் ஒரு பாஷையை யாவரும் அறிந்து அதன்மூலம் தேசமுழுவதும் ஒற்றுமையாவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.’ ‘பள்ளிக்கூடங்களில் மதவிஷயமாயும் ஆசாரவிஷயமாயும் கல்வி கற்பிக்கவேண்டும்.’ ‘சரீரப்பயிற்சிக்காகப் போதுமான உபாத்தியார்களை நியமிக்கவேண்டும்.’ ‘அதற்குப் போதுமான இடமும் வசதியும் ஏற்படுத்தவேண்டும்.’ ‘எல்லா மாணாக்கர்களும் வாலிபர்களும் இந்திய வாலிபச் சாரணர் சங்கத்தைச் சேரவேண்டும்.’ ‘மாணாக்கர்கள் சுதேசி விரதத்தைக் கொள்வார்களாக!’ ‘ஒவ்வொரு வருஷமும் இரண்டு முறை ஒவ்வொரு பரீக்ஷையையும் நடத்தவேண்டும்.’ ‘இந்திய தேசத்தாரின் தர்மம் என்ற விஷயத்தைப்பற்றி தேசீய வித்யா சாலைகளில் எந்தக் கற்பினை போதிக்கப்படுகின்றனவோ அம்மாதிரியே சென்னை சர்வகலா சாலைப் பள்ளிக்கூடங்களிலும் கற்பிக்கவேண்டும்.’ ‘கூடுமானவரை மாணாக்கர்கள் தேசீய வித்யாசாலைகளை ஆதரிக்கவேண்டும்.’ ‘ஆயுர்வேத யூனானிமுறைகளையும் சாஸ்திரங்களையும் கற்பிக்கப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவேண்டும்.’ ‘தள்ளுண்ட ஜாதியார்களை உத்தாரணம் செய்ய எல்லாவிதங்களிலும் மாணாக்கர்கள் முயலவேண்டும்.’

***

இத்தீர்மானங்கள் மிகவும் சிலாக்கியமானவைகள். மாணாக்கர்கள் அத்தீர்மானங்களை ஆதரித்துப் பேசினபோது அவர்கள் மிகவும் உருக்கமாயும், வாசாலமாயும் சாமர்த்தியமாயும் பேசினார்கள். அதைக் கேட்பதற்கு மிகவும் ஆனந்தகரமாயிருந்தது. இவ்வளவு உன்னதமான நோக்கங்களை உள்ள வாலிபர்கள் இந்திய தேசத்திற்கு சேவகர்களாய் சீக்கிரம் வருவார்கள் என்பது மிகவும் உற்சாககரமல்லவா?

ஆர். ரெங்கசாமி ஐயர்.

# தேசியக் கல்வி.

## ஸிந்து தேசீயக் கல்லூரி.

---

தேசிய சர்வ கலாசாலையின் ஆதீனத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸிந்து தேசீயக் கல்லூரியின் அறிக்கைப் பத்திரத்தைப் பார்வையிட்டோம். அது 1919ஹு அக்டோபர்மீ 1௳ வெளியிடப் பட்டது. கல்வி விஷயத்தில் சிரத்தையுள்ளோர் அனைவரும் அதை அவசியம் பார்வையிடவேண்டும். அதனின்று புதிய விஷயங்களநேகம் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் மேற்கூறிய அறிக்கையைப் படித்து மிகவும் மனமகிழ்ந்தோம். சுதேசக்கல்விக்கு ஏராளமான உதவி செய்திருப்பவரும், மதனப்பள்ளிக் காலேஜுக்கு ஸ்தாபகருமான புரோபஸர் எர்னஸ்டு வுட் அவர்கள் இக்கல்லூரிக்குத் தலைவர். இந்தியா தேசத்தின் கைங்கர்யத்தில் தானும் சேரவேண்டும் என்ற அவாமிகுந்த அவர் மனைவியாரான ஸ்ரீமதி ஹில்டா வுட் அம்மாளும் உபாத்தினியாயமைந்துள்ளார். இன்னும் அநேகர் புரோபஸர்களாகவும் உபந்யாஸகர்களாயும் உபாத்திமாராயும் அமைந்துள்ளார்கள். புதிதாக அநேகம் நேர்த்தியான பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டு மாணாக்கர்கள் உறைவிடங்களும், பயிலுமிடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மற்றைக் கல்லூரிகளினின்று இக்கல்லூரியை வித்தியாஸப்படுத்தும் அம்சங்களை மட்டும் இங்குக் கவனிப்போம்.

இக்கல்லூரியில் தேசிய சர்வ கலா சாலையின் அடியில் கண்ட விருதுகள் அல்லது டிகிரிகளுக்குத் தகுதியாய்ச் செய்வதற்கு ஏற்பட்டிருக்கும் பரீக்ஷைகளுக்காக மாணாக்கர்களை ஆயத்தப் படுத்துகிறார்கள். அதாவது தொழிற் சாஸ்திரம், வியாபார சாஸ்திரம், ராஜ தத்துவ சாஸ்திரம், பாஷா ஞானம், கிருஷி சாஸ்திரம் இவைகளில் பிரதம விருதுகளுக்கு யோக்கியர்களாகும்படி மாணாக்கர்களுக்கு

வித்தையைக் கொடுக்கிறார்கள். மற்ற சர்வகலா சாலைகளில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினவர்களும், அல்லது ஸ்கூல் பைனல் பரீக்ஷகளில் தேறினவர்களும் அல்லது தேசிய வித்யாசாலையில் 10-வது வகுப்புப்பரீக்ஷை தேறினவர்களும், முதல் காலேஜ் வகுப்பில் சேரலாம். அதற்கு அடுத்த 3வருஷங்கள் யூனிவர்ஸிடி அல்லது சர்வகலாசாலை வகுப்புகளில் படித்து பரீக்ஷையில் தேறினால், விருதுகள் அளிக்கப்படும்.

காலேஜ் வகுப்புகள், யூனிவர்ஸிடி வகுப்புகள் இவைகளில் வாரத்திற்கு 34 காலப்பகுதிகள் உண்டு. மதக்கல்வி 1, தேகப்பயிற்சி 1, இந்திய தேச உரிமை 2, தேசபக்தி 1, விளையாட்டுகள் 5, ஆக 10 காலப்பகுதிகள் இவ்விதம் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆகையால் மிகவும் முக்கியமான மேற்கூறிய விஷயங்களில் மாணாக்கர்கள் தேர்ச்சியடைகின்றார்கள். மற்ற 24 காலப்பகுதிகளில் அவர்களுடைய சொந்த சாஸ்திரங்களைக் கற்பிக்கப்படுகிறார்கள். தவிரவும் தாய்ப்பாஷையாகிய ஹிந்தி பாஷையும் ஆங்கிலமும் காலேஜ் வகுப்பில் வாரம் 3, 4, காலப்பகுதிகளில் கற்பிக்கப்படுகின்றன. மேலும் ஆங்கிலம் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்கள் யாவையெனில், அன்னிபெஸண்டம்மாள் எழுதியிருக்கும் புஸ்தகங்களும் ரவீந்திரநாத டாகூர் எழுதிய புஸ்தகங்களும் இவைபோன்றவைகளும். வியாபார சாஸ்திர மாணாக்கர்களுக்கு யூனிவர்ஸிடி வகுப்புகளில் ஹிந்தி பாஷையைக் கற்பிக்கிறார்கள். ஏன் என்றால், அவர்கள் இந்தியா முழுவதும் யாவரும் அறிகிற பாஷையை அறியாமல் எங்ஙனம் வியாபாரம் செய்வது? மேலும் ராஜதந்திர சாஸ்திர மாணாக்கர்கள் யூனிவர்ஸிடி வகுப்புகளில் படிக்கவேண்டிய புஸ்தகங்களுக்கு ஸ்ரீ பகவான தாஸர் எழுதியுள்ள "மனுதர்ம சாஸ்திரம்" அல்லது "ஜன ஸமூகப் பாகுபாடு சாஸ்திரம்" ஒன்றாகும். மாண்டேகு செம்ஸ் போர்டு ரிபோர்ட்டு மற்றொன்றாகும். ஆகையால் இக்கல்லூரியில் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்படும் விஷயங்கள் தற்காலத்திய மற்றைய இந்தியக் கல்லூரிகளில் மாதிரி

இந்தியாவுக்குச் சம்மந்தமேயற்ற விஷயங்களாயில்லாமல் இந்தியா சம்பந்தமான விஷயங்களையே கற்பிக்கிறார்கள் என்று வெளிப்படுகிறது. இது சரியென்றே யாவரும் அங்கீகரிக்கக் கூடிய விஷயம்.

தேசபக்திக்காக வாரம் 1 காலப்பகுதி பாடமுண்டு என்று மேற்கூறினோம். டாக்டர் ரவீந்திர நாத டாகூர், காந்தியடிகள், பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, ஸ்வாமி தயாநந்த சரஸ்வதி, அன்னிபெஸண்டு, ஸ்வாமி விவேகாநந்தர், டாக்டர் சுப்பிரமணிய ஐயர், ஸர் ஜகதீச சந்திர வஸு, குரு கோவிந்த ஸிங், ஸ்ரீ ராமச் சந்திரன், பகவான் கௌதமபுத்தர் இவர்கள் சரித்திரங்களை யெல்லாம் மேற்கூறிய வகுப்பில் கற்பிக்கப்படுமாம்.

காலேஜ் வகுப்புகளில் அநேகமாய் வாரத்திற்கு ஒரு காலப்பகுதியில் அந்த வார விருத்தாந்தங்களைப்பற்றி வகுப்பில் பேசப்படுமாம். இதனால் அந்த மாணாக்கர்களுக்கும் உபாத்திமாருக்கும் எவ்வளவு அன்னியோன்னியபாவம் ஏற்படும் என்று உன்னிப் பாருங்கள். மாணாக்கர்களுடைய அபிப்பிராயங்களை உபாத்திமார் அறியவும், தவறுகளைத் திருத்தவும் இது உபயோகமாகுமல்லவா?

இக்கல்லூரியானது முக்கியமாய் அங்கு வாசம் பண்ணிப் படிக்கும் மாணாக்கர்களுக்கு ஏற்றது. ஆனால் பகலில் மட்டும் வந்து படித்து இரவில் வீட்டுக்குப் போகும் மாணாக்கர்களையும் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆகாரம் உட்கொண்ட உடன் படித்தல் உடம்புக்குக் கெடுதி விளைவிக்கும். அம் மாதிரியே தொடர்ந்து 4 அல்லது 5 மணி சாவகாசம் மனதைச் சிரமப்படுத்திப் படிப்பதும் உடம்பின் ஆரோக்கியத்திற்குக் கெடுதி. இக்கல்லூரியில் கைக்கொண்ட முறையினால் சில மாணாக்கர்கள் கைத்தொழில், டயிப்ரைட்டிங் முதலியவைகளையும் சிரமமில்லாமல் அப்பியசிக்க இடமுண்டு. மேலும் காலத்திற்கு ஏற்றபடி பள்ளிக்கூட நேரத்தை முன்னும் பின்னும் தள்ளிவைக்கிறதும் உண்டு.

காலப்பாகுபாடு அடியில் கண்டபடி.

| | | |
|---|---|---|
| **காலையில்.** | ம. நி. | ம. நி. |
| கடவுள் வணக்கம், ஆஜர்பட்டி, உபாத்திமார் பிரசங்கம். | 8-மணி. | |
| 1-வது காலப்பகுதி, | 8–15முதல் | 9–5 வரை |
| 2 ... | 9–5 | 9–50 |
| 3 ... | 10 | 10–40 |
| 4 ... | 10–45 | 11–30 |
| **மத்தியானம்.** | | |
| பகல் போஜனம் | 12-மணி. | |
| சிரமபரிகாரமும் உள்விளையாட்டும். | 12–15 | 2–30 |
| வாசித்தல், கைத்தொழில் பயிற்சி, டைப்ரையிட்டிங் முதலிய (உபாத்தியாயர் பார்வையில்) | 2–30 | 4. |
| **மாலையில்.** | | |
| 5-வது காலப்பகுதி | 4—15 | 5 |
| 6 ... | 5 | 5—45 |
| 7 கபாத்துவிளையாட்டுமுதலிய | 5–50 | 7. |

ஹாஸ்டலில் (உறை விடத்தில்) வாசிக்காத மாணுக்கர்களுக்கு மிகவும் குறைந்த கிரையத்திற்கு அதாவது, 3 அணுவுக்கு, மத்தியான சாப்பாடு போடப்படும். ஒரே மொத்தமாக ஒரு மாதத்திற்குள்ள பணத்தைக்கட்டினுலும் சரி, அல்லது அன்றன்றைக்கு கிரையம் கொடுத்தாலும் சரி, மாணுக்கர்கள் அங்கே சாப்பிடலாம். அவர்கள் இளைப்பாறவும் வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பகல் மாணுக்கர்கள் மாலையில் தான் வீடு செல்வார்கள். பகல் போஜனத்

திற்கு வீடு செல்கிறதில்லை. சாப்பிட்டபிறகு கட்டடத் துக்குள்ளிருந்தே விளையாடுதற்கு வேடிக்கை விளையாட்டு களும் உண்டு.

முதலில் பரீக்ஷையில் தேருத மாணுக்கர்கள், அடுத்த சில மதங்களுக்குப் பிறகு வேறொரு பரீக்ஷை வைத்து அதில் தேறுவதற்கு அவகாசமுண்டு.

மேற்கூறிய விபரங்கள் காலேஜ் முதலிய வகுப்புகளைச் சார்ந்தவை. ஆனால் குழந்தைகள் முதல் காலேஜுக்குப் போகும் வரை படிப்பதற்காக 1 முதல 10 வரை வகுப்பு கள் ஏற்பட்டிருக்கின்றன. 1 முதல் 3 வரை வகுப்புகள் முதல்தரப் படிப்பு சம்மந்தம். 4 முதல் 6 வரை வகுப்புகள் இரண்டாம்தரப் படிப்பு சம்மந்தம். 6 முதல் 10 வரை வகுப் புகள் உயர்தரப் படிப்பு சம்பந்தமானவை. எல்லா வகுப் புகளையும் தினந்தோறும் கடவுள் வாழ்த்துப்பாட்டு தேச வாழ்த்துப்பாட்டுகள் பாடியே துவங்குவது வழக்கம். முதல் வகுப்பு முதற்கொண்டே தேச பக்தி புகட்டப்பட்டு வருகின்றது. இந்தியாவின் பெருமையை அச்சிறுவர்கள் கூட உணரும்படி பாடல்கள் மூலம் கற்பிக்கப்படுகிறார்கள். அத்தியந்த சுத்தம், சரீரத்திற்கு ஆரோக்கியத்தைத் தரக் கூடிய தேகப் பயிற்சி, இவைகள் ஒவ்வொரு மாணுக்கனிட மும் இருத்தலவசியம், என்று மாணுக்கர்களுக்கு வற்புறுத் தப் படுகிறது. அன்பாலே குழந்தைகளை ஆளவேண்டும் என்ற விதி இப்பள்ளிக்கூடத்தில் தவருது அனுஷ்டிக்கப் படுகிறது. சரீர சிக்ஷையென்பதே கிடையாது. முதல்தரம் இரண்டாம்தரம் வகுப்புகளுக்குத் தலைமை உபாத்தியாயர் புரொபஸர் அத்வானி அவர்கள் எம். ஏ., பி. எஸ். ஸி., எப். ஸி எஸ்., ஹில்டாவுட் அம்மாள் முதல்தர வகுப்பை மேல்பார்க்கும் உத்யோகத்தை வகிக்கிறார்கள்.

I-வது வகுப்பு முதல் X-வது வகுப்பு வரை எல்லா வகுப்புகளிலும். தேசபக்தியை புகட்டக்கூடிய பாடங்கள்

கற்பிக்கப்படும்; மேலும் பரோபகாரச் செயல்களைச் செய்வது முதற் கடமையெனப் போதிக்கப் படுகின்றது, யாவருடனும் மரியாதையாயும், பிரியமாயும் பழகும்படி வற்புறுத்தப்படுகிறது. மதப்பயிற்சியில் எல்லா மதங்களுக்கும் பொதுவாயுள்ள தத்துவங்களைக் கற்பிப்பதுடன், அவ்வம்மதத்தார்க்கு அவரவர்களது வேதப் புத்தகங்களையும் கற்பிக்கிறார்கள்.

தேகப்பயிற்சி விஷயத்தில் ஆங்கில விளையாட்டுகளுடன் சுதேசக் கபாத்துகளையும் விளையாட்டுகளையும் கற்பிக்கிறார்கள்.

இந்தக்கல்லூரியில் சாரணர்கள் அநேகர் சேர்ந்திருக்கிறார்கள் என்பது சொல்ல வேண்டுவதில்லை.

உறைவிடம் பிரின்சிபல் வுட் அவர்கள் மேற் பார்வையில் நடக்கிறது. பெரிய வகுப்பு மாணாக்கர்களில் தகுந்தவர்களை சட்டாம்பிள்ளை அல்லது பிரேபக்ட் ஆக நியமித்திருக்கிறார்கள். அவர்கள் உறைவிடத்திற்கு ஏற்பட்ட விதிகளை மாணாக்கர்கள் அனுஷ்டிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். ஆனால் அவர்கள் மாணாக்கர்களை பயமுறுத்தவாவது கண்டிக்கவாவது, அடிக்கவாவது கூடாது. எல்லாம் நயமாகவும் சாமார்த்தியமாகவும் நல்வழியில் கொண்டுபோகவேண்டும். அநேகம் உபாத்திமாருக்கு அங்கேயே இருப்பிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் மாணாக்கர்களுக்கு நிரம்ப உபகாரம் உண்டு.

மேற் கூறிய அறிக்கைப் புத்தகம் முழுவதும் மிகவும் விசேஷமான விஷயங்கள் நிரம்பியுள்ளது. அவ்வளவையும் இங்கு எடுத்துக் கூறுவது முடியாதாகையால் இம்மட்டோடு நிறுத்துகிறோம்.

ஆர். ரெ.

# தத்துவஞான அனுஷ்டானம்.

(200-ம் பக்கத்தொடர்ச்சி)

பால்யத்தில் புசிப்பதும், ஜலம் குடிப்பதும், மூர்க்கமாக முறண்டு செய்வதும், பொம்மைகளுடன் விளையாடுவதும், கெக்கலி கொட்டிச் சிரிப்பதும் தேஹஸம்மந்தமான பசுப்பிரஜ்ஞையே ஒழிய ஜீவனன்று. குழந்தைகளின் இந்தப்பசுப்பிரஜ்ஞையைப் பலதடவைகளில் நிக்ரஹித்தல் அத்யாவசியமே ஒழிய, சரீர தண்டனை ரூபமான வெளி நிரோதம் கூடாது. ஒருவேளை சரீர தண்டனையால் குழந்தைகளின் பசுத்தன்மை நிக்ரஹத்திற்கு வரினும் அவர்களின் சரீரங்கள் அந்த தண்டனையாலே தடித்தனமாய் பரிணமித்தல் யதார்த்தமானபடியால் ஜீவனுடைய பாரமார்த்திக சைதன்யத்திற்குப் பங்கம் உண்டாகும். குழந்தைகளிடம் உத்தமஸ்வபாவத்தின் சின்னங்களான பாவங்களும் சங்கற்பங்களும் மறைவாயிருக்கும். பால்யத்தில் அவைகள் மிகவும் சூட்சுமமாக இருக்கும். சரியான சிரத்தையோடு குழந்தைகளை நடத்தினால் மனோரம்யமாயுள்ள ஸத்குணங்களையும் கபடமில்லாத மனோதர்மத்தையும் உண்டாக்கலாம். சரீர தண்டனை குழந்தைகளின் ஸ்தூல தேஹத்தின் துர் அப்யாசங்களைக் கொஞ்சம்போக்கடிக்கக்கூடுமே ஒழிய அவர்களின் சூட்சும சரீரங்களைக் கெடுத்துவிடும். குழந்தைகளை அனேக தடவைகள் அடித்துக்கொண்டுவந்தால் ஸ்திரீ புருஷர்களிடம் நிஜமாய் இருக்கவேண்டிய உத்தமமான கிரஹண சக்தி குழந்தைகளிடமில்லாது போகும்.

மானிட ஜன்மத்தின் அனுபவங்களெல்லாம் ஒரு ஜன்மத்திலேயே உண்டாக முடியாதென்பதாகவும் ஜீவன் பரிபக்குவம் ஆவதற்கு அனேக ஜன்மம் அவசியமென்பதாக

வும், அவன் ஜன்ம ஜன்மத்தில் கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியாவானென்பதாகவும், இதரர்களுடைய விருத்திக்கு இப்பங்கம் உண்டுபண்ணுமல் இருக்குமளவும் பிரதிஜீவனும் அவனவனுடைய பரீக்ஷைகளைத்தானே செய்துகொள்வதற்கு ஸ்வதந்தரனுயிருக்கிறுனென்பதாகவும், ஒவ்வொருவனும் தான் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தானே உத்தரவாதியாக இருப்பானென்பதாகவும், அவனுக்கு இதரர்கள் சகோதரர்களாகவும், சேர்ந்தவர்களாகவும் எம்மட்டும் ஒழுகுகிறுர்களோ அம்மட்டும் அவன் விஷயமாய் அவர்களும் உத்தரவாதமுடையவர்களாயிருப்பார்களென்றும், எப்பொழுது பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் அறிவார்களோ அப்பொழுதுதான் குழந்தைகளின் யோக க்ஷேமத்தைக்குறித்தும் சிக்ஷாவிதானத்தைக்குறித்தும் அவர்களுக்குப்பரிஷ்காரமானதிருஷ்டியுண்டாகும். அப்பொழுதே குழந்தைகளின் உத்கிருஷ்டாம்சமான ஜீவனுக்குப் ப்ரதிபந்தகமின்றி அவர்களின் பசு ஸ்வபாவத்தையே கண்டிக்கக்கூடிய பால சிக்ஷாவிதானம் ஏற்படுத்துவதற்குக் கஷ்டமிராது.

குடும்பத்தில் ஸ்திரீ புமான்களின் சம்பந்தத்தை விசாரித்தால் அவர்களிருவரும் உத்தரவாதங்களிலும் பாத்தியதைகளிலும் ஸமானர்களென்பதாகத் தத்வஞானம் போதிக்கின்றது. கடமை ரூபமாகவும், உரிமை ரூபமாகவும் இருக்கும் தர்மத்தைத் தவிர வேறெதுவும் அவர்களை அக்குடும்பத்தில் தம்பதிகளாகச் சேர்க்கவில்லை. அவர்கள் ஏக குடும்பத்தில் சேர்ந்திருத்தல் இது முதல்தடவையன்று, இதுவரைக்கும் அனேகம் தடவைகள் சேர்ந்து பரஸ்பரம் கர்ம ரிணத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். தங்களுக்குப் பிள்ளைகளாகவும் ஆசிருதர்களாகவும் ஜனிக்கும் இதரஜீவர்களும் கூட அவர்களின் கர்மரிணத்தால் பந்தமுள்ளவர்களாயிருப்பார்கள். இவ்விதமாக ஒருவருக்கொருவர் ஏற்பட்ட கர்ம ரிணத்தாலும் குடும்

பத்தில் இதர ஜீவர்களுக்கும் தங்களுக்கும் உள்ள கர்ம ரிணத்தாலும் அவர்களிருவரும் பாரியை பர்த்தாவாக ஜனிப்பார்கள்.

தம்பதிகளாகச் சேர்வதால் ப்ரீதி விசுவாசம் விசேஷமாக விருத்தியாவதற்குக் காரணமாகிறது. அப்பொழுது தான் அவ்வித தம்பதிகளின் சேர்க்கை சரியானதாகும் தம்பதிகளாகச் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் இருவர்களின் கர்மம் அவர்களுக்கு அசௌகரியத்தை அளிப்பதும் உண்டு. ஸ்திரீ புமான்கள் தங்கள் தெய்வ ஸ்வாபத்தை நன்ருய்த் தெரிந்து கொண்டு இருவரும் சேர்ந்து நிர்வஹிக்கவேண்டிய வேலையைக் கண்டுகொள்ளவேண்டுமென்பதே பகவத் உத்தேசம். அந்த தம்பதிகள் செய்யவேண்டிய கார்யமெல்லாம் பகவத் கார்யத்திற்குச் சேர்ந்த ஒரு பாகமே ஒழிய, வேறன்று. ஜீவர்கள் பிரேமையால் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளக் கடவார்கள். பிரேமையால் அறிந்துகொள்ள முடியாத பக்ஷத்தில் துவேஷத்தால் அறியக்கூடிய மாதிரி அவர்கள் கர்மம் பலவந்தப்படுத்தும். ஆரம்பத்தில் தூரத்தில் தள்ளும் துவேஷம் முடிவில் ஜீவர்களை சமீபத்திற்குக் கொண்டுவரும். இந்த ஜன்ம ரஹஸ்யத்தை ஸ்திரீ புருஷர்கள் தாம்பத்யத்திற்குப் புறம்பாகக் கண்டு கொள்கிறார்களே ஒழிய பரஸ்பரம் கண்டு கொள்வதில்லை. இதுவே தாம்பத்யத்தை ஏற்படுத்தினதின் பகவத் நியமமாக விருக்கிறது. தன் ஆத்மாவையும் மற்றொருவருடைய ஆத்மாவையும் கண்டுகொள்வதற்கு தாம்பத்யத்தைப் போல்பெரிய அவகாசங்களைக்கொடுக்கும் ஸம்பந்தம்வேறெதுவுமில்லை. ஸ்திரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் இவ்வித அவகாசங்கள் கொடுக்கப்படும்பொழுது, அவைகளை உபயோகப்படுத்தினார்களாயின் பரமார்த்தவாழ்வில் விருத்தியாகி, பகவானிடமும் மானிடவர்க்கத்திடமும் அவிச்சின்னமாகப்பிரகாசிக்கும் ஆன்மாவை அடைகிறார்கள்.

குடும்ப ஜீவனத்திற்கு இப்பாரமார்த்திக உத்தேசம் ஆதாரமாயிருக்கிறதென்பதாகக் கிரஹித்தால் குடும்பத்திற்குச் சம்மந்தப்பட்ட உத்தரவாதம் உரிமை முதலிய வேறு விதமாகப் பரிணமிக்கின்றன. குடும்பத்திற்கு சம்பந்தப்பட்ட சிறு சிறு கடமைகள் கூடப் பெருமையோடு கூடியிருக்கும். குழந்தைகள் ஜனிப்பதும், இறப்பதும், அவர்களை வளர்த்துப் பழக்குவதாலுண்டாகும் பலவித சிந்தனைகளும், அக்குழந்தைகள் கொடுக்கும் சுகதுக்கங்களும் ஆத்மாவைக் கண்டு கொள்வதற்கு ஸாதகமான பல விதங்களாயுள்ள அனுபவங்களாயிருக்கின்றன. குடும்பமென்பது சில வருஷங்கள் வரைக்கும் சேர்ந்திருந்து பின்னர் தங்கள் தங்கள் மார்க்கத்திற்செலலும் ஸாமான்யப் பிரயாணிக் கூட்டங்களின் சேர்க்கை ஸ்தானமன்று. அது ஒரு நாடகசாலை யென்றாகிலும் அல்லது ஆலயம் அல்லது மந்திர மென்றாகிலும் சொல்லக்கூடும். ஒரு நாடகமானது அவ்விடம் அப்பியஸிக்கப்படுகிறது. அதற்கு ஸம்பந்தப்பட்டவர்களெல்லோரும் தாங்கள் கைக்கொண்ட வேஷங்களை பகவானும் மனிதர்களும் ஆனந்திக்கும் விதம் ஆனந்தமாகவும் கம்பீரமாகவும் நடித்தல் வேண்டும்.

வீட்டில் எஜமான் வேலைக்காரர்களின் ஸம்பந்தம் கூட இவ்வண்ணமே யிருக்கும். ஸாமான்யமாக வேலைக்காரர்களைவிட எஜமானே அதிகப் பக்குவப்பட்ட ஜீவனாயிருப்பான். தன்னைவிட பெரிய ஜீவனுடைய ஸஹாயத்தாலே தான் விருத்தியாவதற்காக அவன் அக்குடும்பத்தில் சேவகனாகச் சேர்வான். நாம் ஏதோ ஒருவனை சேவகனாக ஏற்படுத்திக்கொள்ளுகிறோம் என்றால் அவன் நமது குடும்பத்திற்கு வருதல் அகஸ்மாத்தன்று. நாம் அவனுக்குச் சம்பளத்தைக் கொடுக்கலாம். ஆனால் அதோடு மாத்திரம் நமக்கும் அவனுக்கும் உள்ள கர்ம ஸம்பந்தம் முடிந்து போகவில்லை. வேலைக்காரனும் எஜமானைப்போலவே ஒரு ஜீவன்.

எஜமானுக்கு அவன் சகோதரன் என்னும் சொல்லலாம். திரவியத்தைக் கொடுத்த மாத்திரத்திலேயே எஜமான் சேவகர்களுக்குள்ள சகோதர பந்தம் இல்லாது போகாது.

உத்தம வழிகளைக் காண்பிவிக்கப்படுவதற்காக ஸாமான்யமாய் சேவகர்கள் எஜமானர்களிடம் சேர்க்கப்படுவார்கள். அவ்வித ஸஹாயம் இல்லையாயின், வேலைக்காரர்கள் நல்ல வழிகளைக் கற்றுக்கொள்ளமாட்டார்கள். நல்ல பிரவிருத்திகளுக்குச் சம்மந்தப்பட்ட பரிசுத்தம், ஒழுங்கு, நியாயபுத்தி, தயை, மரியாதை, ஸதாசாரம், நாகரீகம் முதலான குணங்களை எஜமான் தனது ஸகோதரனாகிய வேலைக்காரனிடம் நேரில் காட்டவேண்டும். சேவகர்களுக்கு அவ்விதம் நிதர்சனமாய்க் காட்டினாலும் அவர்கள் அக்குணங்களைத் தங்கள் அனுஷ்டானத்தில் தவறாமல் காட்டவேண்டுமென்பதாக எஜமானர்கள் எதிர் பார்த்தல் அனுசிதம். மனப்பூர்வமாய் நமது சேவகர்களுக்கு ஸஹாயத்தைச் செய்து அவர்களிடமுள்ள உத்தம அம்சத்தை வெளிக்காட்டிக்கொண்டிருந்தாலும், பொறுமை உள்ளவர்களாகி தெளிந்த அறிவோடு நடத்தல் நமக்குக் கடமையாக இருக்கிறது. சேவகஸ்திதியில் அனேக ஸத்குணங்களை அப்யசிக்கக்கூடும். அந்த ஸத்குணங்களை பின்னர் பெரிய அவகாசங்கள் கிடைக்கும்பொழுது அவனிடம் பெரிய கார்யங்களைச் செய்விக்கும். எஜமானுயிருக்கப்பட்டவன் கற்கவேண்டிய ஸத்குணங்களைக் கற்காவிடின் அவைகளைக்கற்றுக்கொள்வதற்காக மீளவும் சேவகனாய் ஜனிக்கவேண்டி வரும். சேவகனாகி நன்றாய் நடந்தவன் மிருதுத்வத்தையும், நல்ல யோக்கிதையையும், நல்ல கார்யங்களையும் அனுஷ்டிப்பானாகையால், வரும் ஜன்மத்தில் ராஜாவாக ஜனிக்கக்கூடும். தப்பின வழியில் பிரபுத்வம் செய்தவன் கிருதா கிருத தோஷத்தாலே வரும் ஜன்மத்தில் பிச்சைக்காரனாகிக் கந்தைத்துணிகளைத் தரித்து பூமியில் சஞ்சரிக்க வேண்டி வரினும் வரும்.

குடும்பத்திலுள்ள பசுக்களும்கூட ஜனங்கள் நினைக்கிறபடி அவ்வளவு அமுக்கியமான பிராணிகளன்று. மானிடர்களிடத்திலுள்ள பகவத் சைதன்யமே பசுக்களிடத்தும் உளதே ஒழிய வேறில்லை. மானிடர்களிடம் இருப்பதைவிட அவைகளிடத்து அச்சைதன்யம் குறைந்த ஸ்திதியில் இருப்பதால், அவ்வளவு விகாஸம் ஆகவில்லை. மனிதர்களின் ஸம்பந்தத்தாலே பசுக்களிடத்துள்ள சைதன்யமும் விருத்தியாகக்கூடியது. பசுக்களின் விஷயமாய் மனிதர்களுக்குள்ள கடமையென்னவெனின், அவர்கள் அவைகளை அநாகரிகஸ்வபாவத்தினின்று தடுத்து மனிதர்களுக்கு யோக்கியமான பிரேமை, பக்தி, ஆலோசனை சக்தி முதலான குணங்களை அவைகளிடம் உண்டாக்கவேண்டும். பசுக்கள் நமக்காக அவைகளின் சரீர பலத்தை, உழைக்கல் மூலமாய், அளிக்கும். நாம் அப்பசுக்களை மானிட ஸ்திதிக்கு கொண்டுவர உத்தேச பூர்வகமாய் அவைகளை உபயோகப் படுத்தல் வேண்டும். பசுக்கள் ஒரு சமயம் மனித ஸ்திதிக்கு வருதல் நிச்சயம். நாம் நாயின் அறிவை விருத்திப்படுத்த எண்ணுவோமேயாகில் அவைகளிடத்துள்ள பசு ஸ்வபாவத்தை ஜாஸ்தி செய்யப்படாது. நாய்களை வேட்டைக்காகப் பழக்கின், அவைகளிடத்துள்ள பசு ஸ்வபாவம் இன்னும் அதிகமாகும். வளர்க்கும் பூனை எலிகளைப் பிடிப்பதில் எவ்வளவு கூர்மையாக இருந்தாலும், கடவுள் அதை ஒரு மானிட குடும்பத்தில் சேர்த்திருப்பதானது அதற்காக அன்று. குதிரைகளைப் பந்தயத்திற்கோ அல்லது வேட்டைக்கோ பிரமாதமாய் ஓடச்செய்தல் சரியன்று. அவைகள் நமக்கு அளிக்கும் வேலையால் சீக்கிரம் மனித ஸ்திதிக்குக் கொண்டு போகும் குணங்களை நம்மால் அவைகள் அடையவேண்டும். எந்தப் பிராணிகளை நாம் வளர்க்கினும் அவைகளிடத்துள்ள பசு குணங்களைப் போக்கடித்து மானிட குணங்களை அவைகளுக்கு உண்டு பண்ண வேண்டும். இதுவே பசுக்களிடத்து நமக்குள்ள கடமை. இப்பொழுது

மனிதனுயிருக்கப்பட்டவன் பின்னர் எவ்விதம் ஈசுவரனுகக் கடவனே அவ்விதமே யிப்பொழுது பசுவாக இருக்கும் பிராணி பின்னர் மனுஷ்ய ஸ்திதிக்கு வரும். பகவத் சைதன்யம் சீக்கிரம் உன்னத ஸ்திதிக்குச் செல்லும் விதம் எவன் ஸஹாயத்தைச் செய்வானே அவனே லோகாபி விருத்தி விஷயமாய் நன்ருய்ப் பாடுபட்டவனுகின்ருன். அப்படிப் பட்டவனே உலக ஸேவகனுவான்.

ஸி. ஜினராஜ தாஸர்.

---

[ஸ்ரீமான் ஸி. ஜினராஜ தாஸர் அவர்கள் 1917-ம் வருஷம் ஜுலையில் அடையார் புல்லட்டீனில் இங்கிலீஷ் பாஷையில் பிரசுரித்த விஷயத்தின் மொழி பெயர்ப்பு. வி. ஆர். நாயுடு, மொழி பெயர்ப்பாசிரியர்.]

---



எல்லோருக்கும் அவசியமானது.

புதுமாதிரியான ஷர்ட்டுகள்.

ஒவ்வொருவரும் வாங்கத் தவறுதீர்கள்.

36-இஞ்சி நீளம்.

இது நேர்த்தியான இங்கிலீஷ் டுவீலில் கை தேர்ந்த தையற்காரரைக் கொண்டு தற்கால பாஷன்படி சிப்பிப்பொத்தான்கள் வைத்துத் தைத்தது ஷர்ட் 1-க்கு ரூபா 2; டசன் ரூ. 23 கீர்த்திவாய்ந்த காகி டுவீல் ஷர்ட்கள். இது அற்புதமான காகி கலரில் வெகுநேர்த்தியாய்த் தைத்திருக்கும். ஓர்முறை வாங்கினுல் மறுமுறை வேறெந்த ஷர்ட்டும் வாங்கப் பிரியமிராது. ஷர்ட் 1-க்கு ரூபா 2-8-0; டசன் ரூபா 29. கழுத்தின் சுற்றளவு தெரியப் படுத்தவும்

வி. பி. மணி அண்டு கோ,
10, வைத்தியநாதமுதலி தெருவு,
சவுக்கார் பேட்டை, மதராஸ்.

# மனதும் அதன் தர்மங்களும்

மனது என்றால் யாது? அதன் தர்மங்கள் யாவை? என்பதைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருப்பதால் அதை விசாரிப்போம்.

1. பிரதி காரியத்திற்கும் சக்தி வினியோகப்படாமலே காரியம் நடைபெறாது. கால்களின் சக்தி செலவாகாமல், நடப்பது சாத்தியமில்லை. ஒவ்வொரு அடி வைக்கும்பொழுதும் சிறிது சக்தி செலவாகுமல்லவா? இவ்விதமே மனதின் பிரதி சங்கற்பத்திற்கும் அதன் சக்தி செலவழிந்துகொண்டிருக்கும். மனது இமைப்பொழுதாவது வேலையற்றிராது. எப்பொழுதும் ஏதாவதொரு சுபாவத்தொழிலைச் செய்துகொண்டேயிருக்கும். மனதிற்கு இவ்வளவு வேலை செய்யக்கூடிய சாமர்த்தியம் எங்கிருந்து வருகிறது? என்று யோசிக்குங்கால், ஆன்ம சக்தியே மனச் சக்தியாக மாறுதலடைகின்றதென ஆன்றோர் கூறுகின்றனர். இதற்குப் பிரமாணம்:—

"ஒரு மலையில் நீர்ச்சுனையிருந்தது. அதிலிருந்து வெளிப்படும் ஜலப்பிரவாஹம் மலைச்சார்பிலோடி அருகிலுள்ளதோர் ஏரியில் விழுந்துகொண்டிருந்தது. அந்த ஏரிக்கு "பத்து" துவாரங்களுண்டு. ஆகவே, ஏரிக்குச் சுனை நீர் முழுவதும் அத்துவாரங்களின் வழியே நஷ்டமடைந்து, ஏரி ஸதா ஜலமற்றிருந்தது. இவ்வித ஏரியை ஒரு இஞ்சினீர் பார்த்து, வேண்டிய வரையில் பொருள் செலவு செய்து துவாரங்களை மூடி, வேண்டும்பொழுது திறக்கும்படி யமைத்து, கரையை வலுப்படுத்தி ஏரியில் ஜலம் நிற்கும்படி செய்து மேன்மேலும் ஜலம் விருத்தியாகும்படி ஏரியை அகலமாயும் ஆழமாயுஞ் செய்துகொண்டு வர வர, அந்த ஏரி நிறைந்துகொண்டே வந்தது. அவ்விதம் ஜலம் அதிகமாகவே, இஞ்சினீர் கண்ணுற்று, மலையினும் அதிகமாக ஏரியின் கரையை உயர்த்தச் செய்தார். ஏரியும் சுனைவரையில் வியாபித்து

யாவும் ஓரே பிரவாகமாயிற்று. அவ்வேரியின் நீரால் விளைந்த தான்யத்தை அனேகமாயிர ஜீவர்கள் புசித்து, ஆநந்தமடைந்தார்கள்"

இங்கு மலையின் மேலுள்ள சுனையே ஆத்மசக்தி; அதன் பிரவாஹமே புத்தி; ஏரியே மனது; 10 துவாரங்களும் இந்திரியங்களாம்; ஆத்மாவின் சக்தி புத்தியின் வழியாய் மாறுதலடைந்து மனச்சக்தியாயாகிறது. இந்த மனச்சக்தி, இந்திரியங்களின் வழியாய் வெளிச் செல்வதினாலே குறைந்து விடுகிறது.

3. மனச்சக்தியானது கூரிய கத்திபோன்றது. போரில் பழக்கமில்லாத ஒருவன் கத்தியைக் கைக்கொள்வதினால் என்ன பிரயோஜனம்? அவன் உயிருக்கே ஹானி விளைவிக்குமல்லவா? இதையே குறளில் "வாளொடென் வன் கண்ணரல்லார்க்கு" என்றார். ஆத்மசக்தி உபயோகிக்கு முறை தெரிந்து நல்வழியில் உபயோகித்து வந்தால், பக்தருட் சிறந்த பிரஹ்லாதாழ்வார், மார்க்கண்டேயர் முதலியவர்களைப் போல் பிரஹ்மானந்த பதவியையும், முறை தெரியாமல் தீயமார்க்கத்தில், உபயோகித்து வந்தால், இராவணாதிகளான அசுரர்களைப்போல நாசத்தையுமடையச் செய்யும். இது நமது ஹிந்து மதசாஸ்திரங்களின் அபிப்பிராயம்.

4. ஆனமசக்தி குறையும் விதமாவது. ஒரு வஸ்துவைப் பார்க்கும் போது, மனது, கண்களின் வழியாய், பார்ப்பதினால், மனச்சக்தி சிறிது செலவாகும். இவ்விதமே மற்ற இந்திரியங்களின் வழியாகவும், மனச்சக்தி பிரதி நிமிஷமும் செலவாகிக் கொண்டிருக்கும். இந்திரியங்கள் மனதின் ஆதரவால் பிரதி நிமிஷமும் வேலைசெய்து கொண்டேயிருக்கின்றன. ஏரியின் ஜலம் துவாரங்களின் வழியாய் நஷ்ட மடைவதைப் போல, இந்திரிய சஞ்சார மூலமாக மனச்சக்தியானது ஒவ்வொரு நிமிஷமும் வெளிப்பட்டு நஷ்டமாகும். இந்திரியங்களை சுவாதீனப் படுத்தி, அவைகளை

யடக்கி, மனதை ஒருமுகப்படுத்த வேண்டுமென்று குருவாகிய இஞ்சிநீர் போதிப்பார். இந்திரியங்களின் தொழிலின்றால், அவைகளின் வழியே நஷ்டமாகும் மனச்சக்தி உள்ளத்திடமதாய் "ஏரியில் ஜலம் பெருகுவதைப் போல்" விருத்தியாகும். இதற்கே தவச்சக்தி என்று பெயர். தவத்தினாலுண்டாகும் சக்தி; தன்னிடமிருந்து வீணாய் நஷ்டமடைந்து கொண்டிருக்கும் மனச்சக்தியை நிறுத்துவது என்றுபொருள்.

5. நாம் ஒரு கடிதம் எழுதுவதாக வைத்துக்கொள்வோம். அப்படி எழுதுங்கால் பிரதி எழுத்திற்கும் சிறிது "மை" செலவாகுமென்பது நமக்குத் தெரிந்த விஷயம். அவ்வாறே, பிரதி சங்கற்பத்திற்கும் மனச்சக்தியாகிய உயர்நலமமைந்த அரியதனம் மேற்கூறிய வண்ணம் எண்ணத்தின் நிலைமைக்குத் தக்கவாறு சிறிது நஷ்டமாகும். ஒருவன் தன் பெட்டியிலுள்ள ரூபாய்களை ஒவ்வொன்றாய் எடுத்து விட்டால் அதில் வைத்துள்ள முதல் எப்படிக் குறைந்து விடுமோ அப்படியே, மனதில் ஏற்படும் பிரதி தீய சங்கற்பத்தின் வழியாயும் மனச்சக்தி நஷ்டமாகும். உயர்தர மனோதனம் நசிக்கும். ஆகையால், தர்மகாரியங்களைக்குறித்து மாத்திரம் மனச்சக்தியை வினியோகப்படுத்தலாம். அனாவசியமான, தர்மவிரோதமான காரியங்களுக்கு இந்த மேலான சக்தியைச் செலவழித்தல் கூடாது. இதை நாம் அறியாமல் மனதைப் போன வழியிலெல்லாம் அலைய விடுத்து, மனோதனத்தை நாசம் செய்து, நிமிஷ நிமிஷமும் சக்தியைப் போக்கடித்துக் கொள்வதால் முதலழிந்தவர்களாகிறோம்.

6. வீட்டிலிருக்கும் அரிசி முழுவதையும் கடலில் கொட்டிவிட்டு வறுமைக் காலத்தில் அன்னமில்லையென்று துயரப்படும் அறிவில்லாதவனைப் போல, நாம நம்முடைய வாழ்நாளில் மனச்சக்தியை வழியாய, காமக்குரோதங்கள்பற்றிய மனஸ்ஸஞ்சாரமுள்ளவர்களாய், பிரஸ்தாப

சக்தியை நாசம் செய்து கொண்டு, அந்திய காலத்தில் காலபாசத்தினால் பீடிக்கப்பட்டு நம்முடைய பாபகர்மங்களை நினைத்து வருந்துவோம். ஆதலால், அவ்விதத் துயரத்திற் கிடங்கொடாமல் நல்ல எண்ண முடையவர்களாய், இராஜயோகாப்பியாஸத்தை யநுசரித்து ஒழுக வேண்டியது நம்முடைய கடமையாகும். இது நமது ஹிந்து மத பூர்வாசாரியர்களின் உண்மையான அபிப்பிராயம். "யோகம்" என்பது பலவிதமான அர்த்தம் செய்யக்கூடியதாயமைந்துள்ள ஒரு பதம். ஆனால், இங்கு கூறப்படும் பதத்திற்கு இந்திரியங்களை வசப்படுத்தி மனதைச் சமநிலைக்குக் கொண்டுவருவதெனப் பொருள். இந்த யோகத்தினால் மனதின் சக்தி விருத்தியாகி, உலகக்ஷேமத்திற்குபயோகமாகும். யோகம் எட்டுப்படிகளுடையது. இதன் விவரம் ஸத்குரு ஸஹாயத்தினாலறியற்பாலது.

7. ஏரியின் அடிப்பாகம் உவர் மண்ணாயிருக்குமாகில், அதில் வந்து சேரும் ஜலம் கெடுதியடைந்து பயிர்களுக்குத் தீமை விளைவிக்குமாதலால், இஞ்சினீர் அதைக் கவனித்துக் கீழுள்ள கசப்பாகிய உப்பு மண்ணை யெடுத்துவிட்டு, சுத்தமான மணலைப் பரப்பி அதில் ஜலம் நிற்கும்படி செய்து, அதனால் பயிர்களுக்கும் மற்றப்பிராணிகளுக்கும் உபயோகமாகும்படி ஏற்பாடுசெய்வார்.

8. அவ்வாறே, குரோதியும் காமியுமாயிருப்பவன் கூட ஹடயோகாதிகளினால் மனதைப் பழக்கினால், அதாவது அப்பியாஸம் செய்தால், சூக்ஷ்ம மனச் சக்தி விருத்தியாகும். ஆனால், அது தீயதும் அசுத்தமுள்ள சக்தியாகும். காமக்குரோத அசுத்தங்களற்ற மேலானமனச் சக்தியுண்டாகவேண்டுமானால், மிகக் கஷ்டப்பட்டே யாகவேண்டும். கஷ்டமில்லாமல் சுகமேது? ஆகவே, எச்சமயத்திலாயினும் அவ்விதப் பிரயத்தினம் செய்து தீரவேண்டும்.

9. மனிதன் சுதந்திரனே யொழிய பாரதந்திரனல்லன். ஆகையினால், கால தாமதப்படுத்தாமல் மிக விரைவில்

அதற்குத்தக்க முயற்சி யெடுப்பதுமேலாகும். அவ்வாறு செய்வதற்கு உபாயமென்ன வெனின், 5-வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள அசுப இச்சைகளுக்கும், சங்கற்பங்களுக்கும் மாறாக, சுப இச்சைகளையும் சங்கற்பங்களையும் கொண்டு பழகவேண்டும். அவ்வாறு செய்யின், உத்தேசித்த காரியம் கைகூடுமே யொழிய, மற்றெவ்விதத்திலும் சாத்தியப்படாது. இக்கருத்தை முன்னிட்டே கைவல்ய நதிலும்:—

“இம்பரின் வஞ்சை நஞ்சாவிரும்பினை யிரும்பாலெய்யும்
அம்பினை யம்பாற்பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்,
வம்பியன் மாயைதன்னை மாயையான் மாய்ப்பர்பின்னைத்,
தம்பமா பதுவுங்கூடச் சவஞ்சுடுதடி போற்போமே.”

என்று மிகவும் தெளிவாய்ப் போதிக்கப் பட்டிருக்கிறது. ஆகையினாலே, மேற்கூறிய வகையைத்தன்னிடமுள்ள எல்லாத் துர்க்குணங்களையும் அவைகட் கெதிரிடையாஞ் சற்குணத தியானங்களால் நசிக்கச் செய்வது மிகவும் இன்றியமையாத உத்தம சாதகமாகும்.

10: ஆதலால், இந்திரியங்களென்ற துவாரங்களை மூடி, மனமென்னும் ஏரியைச் சுத்தப்படுத்தி, காமக்குரோதங்களென்னும் அழுக்கு மண்ணை மனதின்கண்ணிருந் தெடுத்தெரிந்து, பூததயை என்ற சுத்தமான மணலை மனதில் பரப்பி, “பக்தி” யென்ற கால்வாயை விருத்தி பண்ணி யோகாப்பியாசத்தினால் மனச்சக்தியை விருத்தி செய்து கொண்டு வந்தால், ஈசுவரப் பிரகாசம் ஜீவனிடம் பிரவிருத்திப்பதற்கு (பாய்வதற்கு) மத்தியிலுள்ள சம்மந்தம் அதிகமாகி ஈசுவரப்பிரகாசம் ஜீவனிடத்தில அதிகமாகி ஈசுவரப் பிரகாசம் ஜீவனிடம் விசேஷமாகப் பிரவேசித்து நிரம்பும். பூததயையும், பக்தியும் இல்லாது இத்தேஜோ விருத்தியுண்டாவதற்குச் சாத்தியமாகாது. செடி கொடிகளுக்கு வேரைப்போலும், தீபத்திற்குத் தைலத்தைப்போலும், பூததயை இராஜயோகத்திற்கும், உண்மையான

பக்திக்கும் ஆதார தர்மமாம். இது பூததயைபொருந்தக்கூடிய யோகமாகும். இதற்கே இராஜயோகமென்று பெயர். ஞான குருக்களும்பரமாசாரியர்களுமான பூர்வமஹா ரிஷிகளின் தர்மமாம். பூததயை இல்லாத யோகத்திற்கு ஆசரயோகமென்றும் க்ஷுத்திர வித்தையென்றும் பெயர் கூறப்படும். ஆகையினால், ஜீவன் பிரதி நிமிஷமும் பூததயை உள்ளவனாய், மனதை இந்திரியங்களின் வழியாய்ச் செல்லவிடாமல் திருப்பி தன்னிலைமைக்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டும். இதன் பொருட்டே லக்ஷ்யங்களுமேற்பட்டுள்ளன. இவைகளால் பரிசுத்தமாகிய மனச்சக்தியை விருத்தி செய்து கொண்டு ஜீவன் விசேஷப் பிரகாசமுள்ளவனாய் பரிபூர்ணனாய்ப் பிரஹ்மானந்த பதவியை யடைவான். யோகாதிகாரி குரோத முள்ளவனாயிருந்தால், பிசாச உலகத்தையும், புண்ய காமியாயிருந்தால், தேவலோகத்தையும், பூததயை உள்ளவனாயின், விஷ்ணு பதவியையும் அடைவான். ஆகையினால் ஸம்ஸார மென்ற, இடையீடில்லா வியாதிக்குப் பூததயைச் சிறந்த ஔஷதமாகும். பூததயையின் பிரயோஜனம் இவ்வளவெனச் சொல்லத்திறமன்று. ஆகையினாலேயே, நமது பூர்வ கிரந்தமாகிய ஸ்ரீமத் பாகவதத்தில் மட்டுக்குமிஞ்சின அபார பூத தயையைத் தனக்களிக்கும்படி பக்தன் பிரஹ்லாதாழ்வார் பிரார்த்தித்திருக்கிறார். "காயத்திரி" மந்திரத்தின் அர்த்தமும் இதனையே போதிப்பதாக பிரஹ்ம வித்துக்கள் கூறுகிறார்கள்.

11. மிற்க, மனதிற்கு இன்னொரு தர்மமுண்டு. அதாவது:—உத்கிருஷ்டமான, மகிமை நிறைந்த பரம கிரந்தமாகிய பகவத் கீதையில் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குத் தெரிவித்தபடி, சாதாரணமாய் மனம் சற்றேனும் சும்மா விராது. "சிந்தையையடக்கியே சும்மாவிருக்குந் திறமரிது,, என்றார் தாயுமானவரும். அதற்கு ஸதா சங்கற்பிக்கிற தொழிலும் சங்கற்பத்திற் கனுகுணமான நாமரூபங்களெடுக்கக்கூடிய யோக்கியதையுமிருந்து கொண்டிருக்கின்றது. இதையே;

"மனமது செம்மையா னால்மந்திரஞ் செபிக்க வேண்டாம்,
மனமது செம்மையா னால்வாயுவை யுயர்த்த வேண்டாம்,
மனமது செம்மையா னால்வாசியை நிறுத்த வேண்டாம்,
மனமது செம்மையா னால்மந்திரஞ் செம்மை யாமே."

என்றும்; (திருமந்திரம்)

"மனத்தினா லெண்ணித்தானே வந்ததிவ்வுலகமாகும்"

(கைவல்யம்)

என்றும் விளம்பினர் மெய்ஞ்ஞான தேசிகர்களும். இவ்வுபதேசங்களி னுண்மையை யாழ்ந்து கவனித்தால், மனதிற்குரிய இதர தர்மங்களையும் விசாரிக்க வேண்டுவதவசிய மெனப்படும். நம் மதஸ்தாபகர்களாம் பூர்வ மகா புருஷர்கள், இவ்வித தர்மங்களைத் தெரிந்தே பிறக்காலங்களில் வரும் நம்போலியர்களின் க்ஷேமத்தைக்கருதி, அவ்வித சூக்ஷ்ம தத்துவங்களை, சாசுவத நிதியைப்போல், பல கிரந்தங்களின் மூலமா யமைத்து வைத்து உயர் நலமமைந்த உத்தம ஸ்தானத்தை யடைந்திருக்கிறார்கள். ஆகையால் அந்த தர்மங்களை யுபேக்ஷை செய்யாமல் சாவதானமாய் விசாரித்துத் தெரிந்து அனுபவத்திற்குக் கொண்டு வருவது அதிக க்ஷேமத்திற்கிடந் தரும். ஆகவே, இனிமேற் செல்வோம்.

12. நம்முடைய உருவங்களைப் புகைப்படம் எடுப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் பிரான்ஸ் தேசத்தில் தற்காலத்தில் மனதின் எண்ணங்களையுங் கூட புகைப்படமாய் எடுத்து வருகிறார்கள். அதாவது:— ஒருவன் அநேகமாயிர மைலில் தூரத்திலிருக்கும் நண்பனை நினைத்து நின்றால், படம் எடுக்கும் சக்தி நிறைந்த கண்ணாடியின் எதிரிலுள்ளவன் பிரதிபிம்பமாகாமல் அவன் மனதில் நினைத்துள்ள உயிர்த்தோழனின் உருவம் பிரதி பிம்பமாக அமையும். பின்னும் ஸ்ரீ ராமர் முதலிய திருஉருவங்களை தியானித்து நின்றால், அவர்களுடைய திருவுருவங்களே படமாக வேற்படும். இது விசேஷச் சித்திரமாயிருக்கிறது.

இதற்குக் காரணமென்னவென்பதாய்ச் சிலர் ஆராய்கின்றனர். இதற்கனுகுணமாகப் பூர்வ மஹா ரிஷிகளின் சித்தாந்தத்தின்படி; மனதிலுண்டாகும் பிரதிசங்கற்பத்திற்கும் சூக்ஷ்ம ஆகாயத்தில் உருவப்படம் ஏற்படுகின்றது. காலை முதல் ஒவ்வொரு நிமிஷமும் நம்முடைய மனதிலுண்டாகும் நல்ல சங்கற்பங்களும் கெட்ட சங்கற்பங்களும் சூக்ஷ்மாகாயத்தில் நமக்குத் தெரியாமலே அவைகளின் நிலைமைக்குத் தக்கவாறு பிரதிபிம்பங்களாகவேற்படுகின்றன. இவ்விதமாயெல்லாருடைய புண்ணிய பாபங்களின் பதிவு விபரம் பிரஸ்தாப சூக்ஷ்ம ஆகாயத்தில் ஸதா ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. "சித்திரபுத்திரன் ஜீவர்களின் புண்ணிய பாபங்களைக் கணக்கெழுதுகிறான்" என்று சொல்வது மிஃதேயாம். சித்திரபுத்திரனென்று சொல்லப்படுவது பிரகிருத சூக்ஷ்மாகாயமே. இதைத் தெரிந்து கொள்ளாமற் சித்திரபுத்திரனென்ற ஒருவன் மை, பேனா, கடிதம் ஆகிய உபகரணங்களையுதவியாகக் கொண்டு ஜீவர்கள் செய்யும் புண்ய பாபங்களைக் கணக்கெழுதுகிறானென்று சொல்வது முற்றுந் தவறாகும். மற்றென்னெனில், இவைகளில்லாமலே, தனக்குத்தானே, ஸ்வதஸ்ஸித்தமாய் நம்முடைய நல்ல அல்லது கெட்ட எண்ணங்களின் உருவங்கள் ஆகாயத்திலேற்படுகின்றன. இந்த சங்கற்ப ரூபங்கள், ஸ்தூல திருஷ்டிக்குக் காணப்படுவனவல்ல. சூக்ஷ்ம திருஷ்டியுள்ளப் பிரஹ்ம ஞானிகளுக்குப் புலனாகும் அக்காரணம் கொண்டே தீர்க்கதரிசிகளான மகாபுருஷர்கள், இந்த சங்கற்ப ரூபங்களை ஞானப் பார்வையாலறிந்து, ஜீவனுடைய சென்ற கால நிலைமையைத் தெரிந்து கொள்வார்கள்.

தொடரும்

கிருஷ்ணஸ்வாமி, பி. ஏ.

# சிறுவர் பக்கம்

## தேஹமும் மனமும்.

### ஒரு கதை.

வெகு வெகு காலத்திற்குமுன், தேஹம் தனித்து வசித்து வந்தது. அக்காலத்தில் அதற்குப் பகுத்தறிவு சிறிதும் இருக்கவில்லை. இன்னது நல்லது, இன்னது தீயது, என்று சொல்லவும ஒருவரும் இருக்கவில்லை, நன்மையோ, தீமையோ, அது ஸ்வயேச்சையாய்ச் செய்து வந்தது. ஒருவரும் அது செய்த நன்மையைப் புகழவுமில்லை, தீமையைக் கண்டிக்கவுமில்லை.

வயிறு வெடிக்கத் தின்பதும், வெறியுண்டாகும்படி குடிப்பதும், பெருந் தூக்கம் தூங்குவதும், வீண்பொழுது போக்குவதும், பொய் சொல்லுவதும், மனைவி மக்களை அடிப்பதும், கொல்லுவதும், அயலார் பண்டங்களை அபகரிப்பதும் இத்தியாதி காரியங்களைத் தன் இஷ்டம் போனபடி யெல்லாம் செய்து வந்தது. இது வெகுநாள் நடந்து வந்தது. இவ்வாறு நடந்து வருகையில் ஒருநாள் சமுத்திரக் கரையில் பெருங்குவியலாய்க்கிடந்த அழுகிய மாம்ஸத்தைக் கண்டு தேஹம் உடனே அதைப்புசிக்க எத்தனித்தது. அப்பொழுது "இதைத் தின்னாதே" என்ற மெதுவான மொழி அதன் காதிற்பட்டது.

தேஹம் தன்னைச்சுற்றி நாற்புறமும் பார்த்து, ஒருவருமில்லாதது கண்டு "யார் பேசினது?" என்றது.

இதனது கேள்விக்குப்பதில் வரவில்லை, தேஹம் தனது செவி தன்னை ஏமாற்றிவிட்டதென்று நினைத்து, மறுபடியும் மாம்ஸத்தைப் புசிக்க யத்தனித்தது. முதற் கவளத்தை வாய்ப்பக்கம் கொண்டுபோகையில், மறுபடியும் 'இதை தின்னாதே' என்ற சொல் அதின் காதில் விழுந்தது.

"நீ யார், வெளியே வருகிறாயா, அல்லது உன்னை கண்டு பிடித்து நான் கொல்லவேண்டுமா? என்றது தேஹம்.

சிறிது நிதானித்து, பின் தனது கேள்விக்குப் பதில் வராதது கண்டு, தேஹம மறுபடியும் தின்ன ஆரம்பித்தது. அதற்கு அந்த சமயம் சிறிதும பசியிருக்கவில்லை. ஆனாலும் மாமிசத்தைப் புசித்தது, மிதமாகவாவது புசித்ததா? இல்லை. பன்றிபோல தின்றது. மிதமிஞ்சிப புசித்ததினால் வயிறு 'உப்பி' கண்விழி 'பிதுங்கி' முகமும் பெருத்தது. பின்னர் உண்ட இளைப்பைப் போக்கிக் கொள்ளும பொருட்டு துயின்றது. அது தூங்கி விழித்தபின் அருகிலிருந்த ஒரு சிறு ஆற்றோரம உருண்டு உருண்டு சென்று தனது வாயை ஜலத்தினருகில் வைத்துக்கொண்டு குடித்துவிட்டு, மறுபடியும், மிகுந்திருந்த மாமிசத்தைத் தின்ன ஆரமபித்தது. இவ்வாறு தேஹம் நான்கு தினங்கள் தின்னுவதும் குடிப்பதும், உறங்குவதுமாகக் கழித்தது. பின்னர் தன்வீட்டுக்கு வரவும், நோயும் உடனே வந்தது. அப்போது அதனுடைய பெண்ணினங்கள் அதற்குததகுந்த சிகிச்சை செய்து குணப்படுத்தின. அச்சமயத்தில மேலே குறித்த குரல் மறுபடியும் மெதுவாக "நான அப்போதே இவவாறு தின்னாதே என்று சொன்னேனே" என்றது. தேஹம் "நீ யார்? எங்கிருக்கிறாய்?" என்றது.

"நான் மனது. நான் உன்னுள்ளே யிருக்கிறேன்" என்று அக்குரல பதிலுரைத்தது.

"இதென்ன மோசம்! என்னுள்ளே யிருக்கிறாயா?" என்றது தேஹம்.

"நான் ஒரு சின்னஞ்சிறு பிராணி. ஆனால் என்னிஷ்டப்படி விட்டு விட்டால் நான் பெரியவனாவேன்" என்றது அக்குரல்.

இதைக்கேட்டுத் திடுக்கிட்டு, தேஹம் "என்னுள்ளே யிருக்கிறாயா? இது நிஜமா? நீ எப்படி உள்ளேபோ

ருய்? உடனே வெளியே வருகிருயா? இல்லாவிடில் நான் உன்னைக்கொல்லவேண்டுமா?" என்றது.

இதற்குக் குரல் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. தேஹம் சஞ்சலமும் பயமுங் கொண்டு 'தீத்தண்ணீர்' கொண்டுவரும்படி தன் பெண்ணினங்களுக்குக் கட்டளையிட்டது.

அப்போது குரல் "இதுவேண்டாம்" என்றது.

"ஆஹா! உனக்கு வந்தேன், இதோ" என்று சொல்லிக்கொண்டே தேஹம் மிதமிஞ்சிக் குடிகது வெறி கொண்டு தரையிற் சாய்ந்து கண்டுயின்றது. அப்போது குரலும் 'கம்' என்று இருந்தது. பேச்சுமில்லை மூச்சுமில்லை.

தேஹம் நித்திரைவிட்டு எழுந்த பொழுது, அதற்குத தலைவலியும் கண்ணெரிச்சலும் வாயிலும் நாவிலும் வறட்சியுமுண்டாயிற்று. கொஞ்சமேனும், சுகமில்லை.

அப்போது அக்குரல் "நான் குடிக்கவேண்டாமென்று சொன்னேனே" என்றது.

இதைக்கேட்டவுடன் தேஹம் கோபங்கொண்டு, தனது படுக்கையை விட்டெழுந்து, கட்டித தடுமாறிக்கொண்டு வெளியே சென்றது. அங்கே அதன் குழந்தைகளிலொன்று நின்றுகொண்டிருந்தது. அது தன் தகப்பனைக் கண்டதும "அப்பா வயிறு பசிககிறது. தின்னுவதற்கு ஒன்றுமில்லையா?" என்று கேட்டது. அதற்கு "அப்புறம தொலை" என்று தேஹம் பதிலுரைத்தது.

குழந்தை, அதிக சங்கடத்துடன் மறுபடியும் "வயிறு பசிக்கிறது, ஏதேனும் தின்னக்கொடு" என்று கெஞ்சிக் கொண்டு, தன் தகப்பனது கையைப்பிடிக்கயெத்தனித்தது தேஹம் மறுபடியும் "நான சொன்னது கேட்கவில்லையா! என் கண் முனனில்லாதே யென்றேனே, ஓடிபோயா, பிழைத்தாயோ" என்று கர்ஜித்தது.

(தொடரும்)

எஸ். ஆர். அனந்தநாராயண அய்யர்.

## படங்களுடன் கூடிய கதைகள்.

| | | |
|---|---|---|
| சுசீலாபம — அல்லது கற்பின் மேன்மை | | 0—2—0 |
| சிவாஜிமஹாராஜ் | ஆர். எஸ். நாராயணசாமி | 0—2—0 |
| குமணராஜன் | ஐயர் பி. எல். | 0—2—0 |

## அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

| | |
|---|---|
| விக்கிரஹாராதனை | மகாலயபக்ஷமும் நவராத்திரியும் |
| லோககுருவின் அவதாரங்கள் | அன்னிபெஸண்ட் அம்மை சரித்திரம் |
| ஹிந்து என்பவன் எவன் | ஷை செய்யுள் |
| காயத்திரி | எண்ணங்களின் ரகசியம் |
| காயத்திரி ராமாயணம் | திருப்பள்ளி எழுச்சி—செய்யுள். |

லோககுருவாகிய பரமன் வருவானென்

ஒவ்வொன்றும் இரண்டணா

ஸத்சங்க முறையில் ஹிதோபதேசம

ஜபியால உள்ள பிரயோஜனங்கள்

சமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை

மரணபயம் வேண்டாம். சாமார்க்கதீபம

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள — ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மசரம (8) சின்னங்கள்.

| | |
|---|---|
| தியானக்கிரம விஷயம் | 0—4—0 |
| ஹிந்து மததூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| உதாஸீன ஸாது ஸ்தோத்திரம் | 0—6—0 |
| பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை | |
| கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம் | 0—8—0 |
| மனிதன் வம்சாவளியின் உண்மை | 0–8—0 |
| பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது | 0—9—0 |
| எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர் | 0–12—0 |
| யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு | 0–12—0 |

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

# ஜகப் பிரசித்திபெற்ற

# ஜின்டான் மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நீடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் மைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தப்பதற்கு இம் மாத்திரைகள் சிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

## எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாய்லெட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

**V. சின்னகிருஷ்ண நாயுடு,**

ஸ்ரீ கிருஷ்ணா சாஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி மதுரை